13 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு


"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே'

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 25-2-33

முதலைக் கண்ணீர்



விவசாயிகளின் துயர் கல்மனதையும் கரைப்பதாயிருக்கின்றது. சென்னை ரேவினியூ மெம்பரான காம்பெல் துரைகூட "இப்போது உலகமே வறுமையால் அழுகின்றது. ஆகவே இந்த நாட்டு விவசாயிகளின் துயரைச்சண்டு நானும் வருந்துசின்றேன்" என்று சட்டசபையில் அன்று கூறினர். எல்லா மாகாண ரேவினியூ அதிகாரிகளும் விவசாயியின் பேச்சை எடுத்தால் பரிதாபப் படுபவர்போலப் பேசுகின்றனர். கண்ணீர் வடிக்கின்றனர். ஆனால் கிஸ்தி வசூல் மட்டும் ஜரூராய் நடக்கின்றது. ஷையாரின் கண்ணீரை முதலைக் கண்ணீரென்று ஏன் சொல்லக் கூடாது?

ஹோரின் சவடால்

"நாட்டு மாந்த ரெல்லாம்—தம்போல்
நரர்களென்று கருதார்
ஆட்டு மந்தையாமென் றுலகை
அரசரெண்ணி விட்டார்"

என்ற பாரதியாரின் வரிகள், பார்லிமெண்டு நடவடிக்கைகளைப் பற்றிப் படிக்கும்போது நமது எண்ணத்தில் ஓடுகின்றன. இந்தியாவை ஏதோ கொடுக்கல் வாங்கல் பண்டம் போலல்லவோ நினைத்து ஆங்கிலேயர் பேசுகின்றார்கள்!

"லங்காஷயருக்கு ஆபத்து வந்து விட்டது. ஆகவே இந்தியாவுக்கு அரசியல் முன்னேற்ற மேதும் தரலாகாது" என்று ஸர் ஹென்ரி பேஜ்கிராப்ட் என்பவன் தனது தீர்மானத்தைப் பார்லிமெண்டில் நுழைத்தபோது பேசினான். அவனது தீர்மானம் தோற்றுப்போன போதிலும் அன்று ஸாமுயேல் ஹோர் குதித்த குதியும், பேசிய பேச்சும் வெகு தடபுடலாயிருந்தது.

தனது இரும்புக் கை ஆட்சியை அவர் சிலாகித்துக் கொண்டதைச் சொல்வதா? 'சட்ட மறுப்பு ஓய்ந்தாலன்றி ராஜீயக் கைதிகளை விடுதலை செய்யேன்' என்று பழைய பாட்டைப் பாடியதைக் குறிப்பிடுவதா? அவர் அன்று சொன்ன வார்த்தைகளில் கவனிக்கத்தக்க பகுதி ஒன்றுண்டு.

"பேஜ்கிராப்டின் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டோமானால் ஒவ்வொரு இந்தியனும் நம்மோடு ஒத்துழையாதான் ஆகி விடுவான். ஆனால் நமது கொள்கையின் பயனாக நாளுக்கு நாள் இந்தியாவில் நமக்கு நண்பர்கள் மிகுந்து வருகிறார்கள். பொதுஜன அபிப்பிராயமும் நம்மையே ஆதரிக்கின்றது" என்றார்.

இந்தியாவில் ஸாமுயேல் ஹோருக்கு யார் நண்பர்கள் என்று கேட்கின்றோம். ஸாப்ரூ, சாஸ்திரி, சிந்தாமணி போன்ற மிதவாத வெளவால்களும் ஸாமுயேல் ஹோரைக் கண்டித்துப் பேசத் தொடங்கி விட்டன. ஆனால் ஹோரின் கண்களுக்கு யாவும் நண்பர் குழாமாகத் தோன்றுவது தான் அதிசயம்! பொதுஜன அபிப்பிராயம் தம்மை ஆதரிப்பதாக ஸாமுயேல் 6000 மைல்களுக் கப்பாலிருந்து சவடால் அடிப்பது ஒன்று பச்சைப் புளுகாயிருக்க வேண்டும், அல்லது அறியாமையாக இருக்க வேண்டும். எதுவாயினும் ஒரு பொறுப்புள்ள உத்தியோகத்துக்கு ஸாமுயேல் ஹோர் லாயக்கற்றவரென்பது தெரிகிறது.

காந்தித் தாத்தாவின் கடிதம்

தேச சேவையில் உயிர் துறந்த எல்லூர் ஸ்ரீமதி அன்னபூரணி தேவியின் குமாரி ஸ்ரீமதி ஜான்ஸி, மகாத்மாஜிக்கு 9-ந் தேதி எழுதிய கடிதத்தில்,

"நான் சங்கராந்தி பூஜை தினத்தில் ஹரிஜனச் சிறுமிகளை அழைத்துப் பாடச் செய்து மஞ்சள், குங்குமம் முதலியன கொடுத்தேன். தங்கள் ஆக்ஞைப்படி அப்பா ஹரிஜன சேவை செய்கிறார்." என்று எழுதியிருந்தாள்.

14-ந் தேதி காந்தித் தாத்தா சிறுமி ஜான்ஸிக்கு எழுதிய பதில் கடிதமாவது:—

எனது பிரியமுள்ள அழகி ஜான்ஸிக்கு,

நீ கடித மூலம் அனுப்பிய முத்தத்தைப் பெற்றேன். உனது கடிதத்தை விளக்க நீயே இங்கு வரவேண்டும். நீ பேனாவினால் நேர்த்தியாக எழுதக் கற்கவேண்டும். உனது கையெழுத்துப் புரியவில்லை. அது ஆபாஸமாக இருக்கிறது. நீ முதலில் நேர்க் கோடு, வட்டம், முக்கோணம், சதுரம், சுலபமான சித்திரம் இவற்றைக் கஷ்டமில்லாமல் வரையக் கற்க வேண்டும். இலை, புஷ்பம், பானை, சட்டி முதலிய படங்களை வரையக் கற்க வேண்டும். பிறகு எண்களை சரியாக எழுதவும், முத்துப் போல அக்ஷரங்களை எழுதவும் முடியும். நீ ஹரி ஜனக் குழந்தைகளை நேசிப்பது பற்றிச் சந்தோஷம்.

அன்புள்ள பாபு.

ரங்கய்யருக்கு சம்மன்

இந்தியா சட்ட சபையில் 27-ந் தேதி தீண்டாமை விலக்கு மசோதா, ஆலயப் பிரவேச மசோதா ஆகியவை ஆலோசனைக்குக் கொண்டு வரப்பட விருக்கின்றன. ஆனால் இதைத் தடுக்கப் பூனா சப் கோர்ட்டில் ஸ்ரீமான் ஹர்க்காரே என்பவர் காந்திஜீ, ஸி. எஸ். ரங்கய்யர், இம் மசோதாக்களைக் கொண்டு வரும் மற்றவர்கள் ஆகியவர்கள் மீது தாவா தொடர்ந்திருக்கிறார். இதனால் பூனா சப் ஜட்ஜ் இந்த மசோதாவைக் கொண்டு வருகிறவர்களுக்கு அதே 27-ம் தேதியன்று நேரிலோ, அல்லது வக்கீல் மூலமாகவோ ஆஜராக வேண்டு மென்று பிறப்பித்த சம்மன் அவர்களுக்குச் சாதரா ஆகியிருக்கிறது. அதில் தாவா விசாரணையில் இருப்பதால் இது பற்றிய எந்த நடவடிக்கையும் ஒழுங்கற்றதாக இருக்குமென பம்பாய் அட்வகேட் ஜெனரலுக்கு, சப் ஜட்ஜ் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

"சுதந்திரக் கோயிலெங்கே?"

பீஹார் சட்ட சபையில் அவசரச் சட்டத்தை எதிர்த்து சச்சிதானந்த சின்ஹா என்பவர் செய்த பிரசங்கத்தின் ஓர் பகுதி பின் வருமாறு:—

இந்தத் தேசத்தை ஆள்கின்ற கூட்டத்துக்கு அநுதாப உணர்ச்சி என்பது துளியும் இல்லை. என்றைய தினத்தில் 'தேச பக்தி' என்ற எண்ணம் இங்கு முளைத்ததோ அன்றைய தினத்தினின்று அதைக் கிள்ளி யெறிய பலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரவில்லையா? தேச மக்களுக்கு துளியாவது உரிமைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றனவா? சாதாரண பிரஜா உரிமைகளையும் பிடுங்கி, உலகில் எந்தத் துறையிலும் சுதந்திரமின்றி மக்கள் கட்டப் பட்டிருக்கின்றனர். ஆனல் தேசத்தை நசுக்குவதற்காகக் கடுமையான கொடுஞ சட்டங்கள் இயற்றப்படுகின்றன. இதன் பயன் யாது தெரியுமா? ராஜீயக் காரணமாக சிறைக்குள் புகும் கைதியின் தலையில் 'தியாகி' என்ற கிரீடத்தை தங்களைபு மறியாது சர்க்காரே சூட்டி வருகின்றனர். ஆகவே சட்ட சபையில் நம்பிக்கை கொண்ட மிதவாதிகள் என்ன செய்வ தென்றறியாது திகைத்து நிற்கவேண்டியிருக்கிறது.

நாள் தவறினுலும் தவறும்; ஆனல் இந்தியச் சிறையில் 'தியாகி'கள் புகுவது தவறுவதில்லை. தேச மக்கள் அந்தத் தியாகிகளைப் போற்றுவார்களா? மிதவாதம் பேசும் கூட்டத்தைப் போற்றுவார்களா? இந்த சமயத்தில் ஆங்கில மகா கவி பைரனின் கம்பீரமான சொற்கள் எனது ஞாபகத்துக்கு வருகின்றன.

"தளையேது மற்ற மனமே! நீயும்
தரணியில் ஒளிர்வ தெங்கே?
வளை போன்றிருண்ட சிறையில்—நீயும்
வாழ்ந்தே ஜோலித்திடுவாய். (1)
இதயத்திலூறும் இன்பம்—எதுவோ?
இதயத்தின் சக்தி எதுவோ?
'சுதந்திரம்' என்ற சொல்லே—நல்ல
ஜோதி மிகுந்த சொல்லாம். (2)
'விடுதலை' யன்னை ஈன்ற—பாலர்
விலங்கினைக் கையில் பூண்டு
படியிருள் சிறையில் துயரம்—படவே
பாவன மடையும் தேசம்! (3)

இந்திய தேச பக்தர்களைச் சிறைகளில் கடுமையாக நடத்துவதால் தேச மக்களின் மனது என்ன பாடு படுகின்றது தெரியுமா?

எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் இனம்

[ஸமூகத்திலுள்ள உயர்வு, தாழ்வுகளை ஒழித்துப் போட நாட்டில் பெருமுயற்சி நடந்து வரும் இக்காலத்தில், கபிலர் என்ற தமிழ் நாட்டுப் பாவலர், அக்காலத்தில் பாடிவிட்டுப்போன "அகவல்" பாட்டின் கீழ்க்கண்ட ஓர் பகுதியை மக்கள் பன்முறை படித்து, மனனம் செய்தால் பெரும் பயன் விளையும் என்பதில் ஐயமில்லை.]

* * * *

தென்திசைப் புலையன் வடதிசைக்கு ஏகின்
பழுதற ஓதிப் பார்ப்பானுவான்
வடதிசைப் பார்ப்பான் தென்திசைக்கு ஏகின்
நடையது கோணிப் புலையனுவான்
சேற்றில் பிறந்த செங்கழுநீர் போல்
பிரமற்கு வைப்பு வயிற்றில் பிறந்த வஸிஷ்டரும்
வஸிஷ்டருக்குச் சண்டாளி வயிற்றில் பிறந்த [சத்தியரும்
சத்தியருக்குப் புலைச்சிதோள் சேர்ந்துபிறந்த வியாச
வேதங்களோதி மேன்மைப்பட்டு [ரும்
மாதவராகி வயங்கின ரன்றே?

* * *

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ
வாழ் நான்கு சாதிக்கு உணவு நாட்டிலும்
கீழ் நான்கு சாதிக்கு உணவு காட்டிலுமோ
திருவும் வறுமையும் செய்தவப்பேறும்
சாவதும் வேறில்லை தரணியோர்க்கே
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே ஆதலால்
முன்னோர் உரைத்த மொழிதவறாமல்
எந்நாளாயினும் இரப்பவர்க்கு இட்டு
புலையும் கொலையும் களவும் தவிர்த்து
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி உரைப்பது பிழையெனப் படாது
சிறப்பும் சீலமும் அல்லது பிறப்பு நலம் தருமோ
[பேதையீரே!

இருண்ட சிறைகளைக் கண்டு மருண்ட காலம் போய் அநேகர் அந்தச் சிறைகளே சுதந்திரக் கோயில்களென்றும், கருதுகின்றனர்.

"கல்லுகளும் கம்பிகளும்—மிகக்
கடுகடுத்திடு விழி, சுடு மொழியும்
மெல்லுகின்ற கல்லுச் சோறும்
மேதினியில் சிறையென்ருல் சிறையாமோ?"

சோம்பேறிப் பெண்களுக்கு—

(திப்பு எழுதியது)

நமது பையன்களின் தளுக்குப் புத்தி வர வர அதிகமாகிக் கொண்டே வருகிறது. இரவல் நாகரிகத்தில் நமது பையன்களுக்கு ஏறி யிருக்கும் கிறுக்கு இறங்காத விஷம் போலத் தோன்றுகிறது. பனியன் போடாத உடலும், மேஜோடு அணியாத காலும் பயனற்றவை யென அவர்கள் எண்ணுகின்றனர். சாதாரண ரிக்ஷாக்காரன் முதல், பெரிய சம்பளம் வாங்கும் பேனக்காரன் வரை ஒவ்வொருவனும் பனியனும் மேஜோடும் அணிந்து கொண்டு மினுக்குவதைக் காண்கின்றோம்.

‘ஸ்போர்ட்ஸ்மன் தளுக்கு’ என்று ஓர் வகைக் கிறுக்கு நமது இளைஞர்களுக்கு உண்டு. ‘பாட்மிண்டன்’ துடுப்பைக் கூட எடுக்கத் தெரியாத சில வாலிபர் பெரிய ‘ஸ்போர்ட்ஸ்மன்’ மாதிரி ஆடைகளை யுடுத்திக்கொண்டு அலைகின்றனர். வரிப் புலி உடல் மாதிரி போடப்பட்ட கோடுகளை யுடைய பனியன்களைப் போட்டுக்கொண்டு சிலர் பகல் வேஷங்களாக உலவுவதைக் காண வேடிக்கையா யிருக்கிறது. ‘ஸ்வெட்டர்’ என்று ஓர் வகை பனியன் கடைகளில் விற்கப்படுகிறது. டென்னிஸ் ஆடும்போது அந்த மாதிரி பனியன்களைப் போட்டுக் கொள்ள வேண்டுமாம்! வியர்வைத் துளிகளை அது இழுத்துக் கொள்ளுமாம்! விறகு வெட்டி குப்பன் எந்த ‘ஸ்வெட்டரை’ப் போட்டுக் கொண்டு வேலை செய்கின்றானென்று இந்த நவநாகரிகப் பித்தர்களைக் கேட்கின்றேன். குப்பனுக்கு எந்த வியாதியும் வருவதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் நாகரிக இளைஞர்களின் வியர்வையை இந்த ‘ஸ்வெட்டர்கள்’ உறிஞ்சுவதை விட, மிகத் திறமையோடு கதர்த் துணி உறிஞ்சுகின்றது என்பதையும் அநுபவத்தினின்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

‘மேஜோடு’ என்று இன்னொரு வகை மினுக்கு வர வர வலுத்து வருகின்றது. தொடை மட்டும் ஒரு நிஜாரைப் போட்டுக் கொண்டு, முழங்காலுக்குக் கீழே மேஜோட்டினால் மறைத்துக் கொண்டு பூட்ஸ் போட்டுக் கொள்வது ஒரு நவநாகரிக உடை. இந்த உடையில் சில பிரபுக்களைக் காணும்போது “எங்கே இவர்கள் வண்டி யிழுக்கின்றனர்?” என்ற சந்தேகமே பலருக்கு உண்டாகும்.

நூலினால் பின்னப்பட்டு அந்நிய நாடுகளினின்று வரும் அத்தனை பனியன்களையும், மேஜோடுகளையும் நமது இளைஞர்கள் கொஞ்சங் கூட மீதியின்றி வாங்கிப் போட்டுக் கிழித்தெறிகின்றனர்.

போன வருடத்தில் அதாவது (1930-31) பன்னிரண்டு மாதங்களில் 48 லக்ஷ ரூபாய்க்கு மேல் இந்தியாவில் இந்தக் குப்பைச் சரக்கு இறக்குமதியா யிருக்கிறது. இதில் 41 லக்ஷ ரூபாய்க்கு ஜப்பான் ‘ஸப்ளை’ செய்திருக்கிறது. பணத் திமிரால் என்ன செய்யலாமென்று அலைந்து கொண்டிருக்கும் ஜப்பானுக்கு, பணமின்றி தவித்துக் கொண்டிருக்கும் இந்தியா இப்படி லக்ஷக் கணக்கில் ரூபாயைக் கொட்டிக் கொடுக்க வேண்டுமா வென்று கேட்கின்றேன்.

அது மட்டு மன்று! நமது வீட்டிலுள்ள பெண்மணிகள் சோம்பேறிகளா யிருப்பானேன்? சுதேசி நூலை வாங்கி மேஜோடுகளைப் பண்ணிக் கொண்டு குந்திக் கிடக்கட்டுமே! நமது சகோதரி பண்ணிய மேஜோடென்றால் அதனிடம் நமக்கு அன்பும் ஏற்படும். அது சீக்கிரத்தில் கிழியவும் கிழியாது. ‘மேஜோடு இல்லா விட்டால் பிராணன் போய் விடும்’ என்று கருதுகின்ற இளைஞர்கள் அந்த மேஜோடுகளைச் செய்து தரும்படி தமது குடும்பத்துப் பெண்மணிகளைக் கேட்பாராக! மகா யுத்தத்தின் போது ‘ஸோல்ஜர்களுக்காக’ சீமைப் பெண்மணிகள் தங்கள் கையினால் மேஜோடுகளும் பின்னித் தந்தனரென்று படித்திருக்கின்றோம். அதே போல இங்கு நாம் போடுகின்ற சோற்றுச் சண்டைக்கு மேஜோடு அவசியமானால் நமது பெண்களிடமிருந்தே நாமும் பெற்றுக் கொள்வதே உசிதம். தேசத்துக்கும் லக்ஷக் கணக்கான ரூபாய் மிச்சமாகும். நமது வீட்டில் ஸதா தூங்கிக் கொண்டோ வம்பளந்து கொண்டோ கிடக்கும் பெண்டுகளுக்கும் வேலை கிடைக்கு மல்லவா?

தென்னாட்டில் இந்த பின்னல் வேலை செய்யும் இயந்திர சாலைகள் மைசூர், மலையாளம், சேலம், திருச்சி, மதுரை முதலிய இடங்களிலுண்டு. அந்நியப் போட்டியின் பயனாக அவை அழிந்து கொண்டு வருகின்றன. இந்த பனியன் தளுக்கும், மேஜோட்டு மினுக்கும் அவசியமெனக் கருதும் இளைஞர்கள் சுதேசியாகப் பார்த்து வாங்கலாகாதா? இந்தியப் பின்னல் தொழிலைப் பாதுகாத்தே தீரவேண்டுமென சென்ற 21ம் தேதியன்று டெல்லி சர்க்காருக்கு வர்த்தகர்கள் ஓர் அறிக்கை விட்டிருக்கின்றனர். சர்க்காரும் கவனிக்கவும்.

4 கோடியும் 26 கோடியும்

"ஹரி ஜனங்களின் எண்ணிக்கையைக் கவனிக்கும்போது இவ்வளவு மனித சக்தியை அனுவசியமாக தேசம் வேணுமென்றே தொலைத்து வருகிறதே யென்று வருந்தவேண்டியிருக்கிறது. இதே ஹரி ஜனங்களை ஹிந்து சமூகத்தில் கௌரவமும் ஸமத்வமும் வாய்ந்த மக்களாக ஆக்குவோமானால், அப்போது தேசத்தின் கவுரவமும் ஆற்றலும் அதிகரிக்குமென்பதில் தடையில்லை. இப்போதுள்ள நிலையில் ஸமூகத்துக்கு வீண் பளுவாக அவர்கள் இருந்து வருகின்றனர். ஹிந்து மதத்திற்கு இடையூறு தீண்டாமை தான். இந்த 4 கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் இருப்பதால் நாளடைவில் இதர 26 கோடி மக்களும் அவர்கள் நிலைக்கு இழுக்கப்பட்டு விடுவார்களே யென்று வருந்த வேண்டியிருக்கிறது."

—ஹரிஜன் பத்திரிகையில் காந்திஜி.

மாளவியாவின் கடிதத்தினின்று

"ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் மது விலக்கைப் பற்றிச் சொல்லியிருக்கிறதா வென்று கேட்கின்றீர்கள். 'ந ஸுராம் பிபேத்' என்று வேதம் சொல்கின்றது. மது அருந்துவது பஞ்ச மகா பாதகங்களில் ஒன்றென்றும் அப் பாபத்திற்கு கடும் தண்டனை உண்டென்றும் மனு காலத்திலிருந்து கருதப்பட்டு வருகிறது. சிவ புராணத்தில் "மத்யஸ்ய மத்ய கந்தஸ்ய ச வர்ஜனம், ஸாமான்ய ஸர்வ வர்ணனும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சகல ஜாதிகளும் சாதாரண அனுஷ்டானப்படியே மது அருந்தலாகாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரும்மானந்த புராணத்தில், "ஏதாம் வர்ணம்ச சத்வாரோ ந பிபேயு: கதாசன" (நாலு வர்ணத்துக் குட்பட்டவனெவனும் கள் குடிக்கலாகாது) என்று சொல்லப்பட்டிருக்கிறது. மருந்துக்காக மதுவைச் சேர்த்துக் கொண்டாலும் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டு மென்று கட்டளை யிடப்பட்டிருக்கிறது. ஜீவகாருண்யத்தோடு மனிதனைக் காப்பாற்ற முடியாத ஓர் நிலையில் நாம் வைக்கப்பட்டிருப்பதால் மக்களை மதுவரக்கனிட மிருந்து என்னால் மீட்க முடியாதிருப்பது பற்றி நான் வருந்துகின்றேன்."

கள் மந்திரி கலகலப்பு

மாகாண அரசாங்கங்களில் 'கள்' இலாகாவை நடத்துகின்ற மந்திரிகள், 'அயன்' பேர்வழிகளாக இருக்கின்றனர். கள்ளுக் குடியை ஒழிக்க வேண்டும் என்று பகிரங்க மேடைகளில் வந்து பிரசங்கங்கள் செய்கின்றனர். ஆனால் உள்ளே மந்திரி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு "கள் வருமானத்தை எப்படி அதிக மாக்கலாம்" என்று சூழ்ச்சி செய்து கொண்டிருக்கின்றனர். கள் வருமான மதிகம் வேண்டுமென்றால் கள் வரி அதிகம் கிட்ட வேண்டும்; வரி அதிகம் கிட்ட வேண்டு மென்றால் மொந்தைகள் அதிகம் உருள வேண்டும்; மொந்தைகள் அதிகம் உருள வேண்டுமானால் குடியர்கள் அதிகமாகப் புரள வேண்டும். இது தான் மது மந்திரிகளின் மதியின் போக்கு! ஆயினும் சில ருத்ராக்ஷப் பூனைகள் வெளியே வந்து 'மிதக் குடி' பிரசாரம் செய்யவும் தயங்குவதில்லை.

உதாரணமாக ஐக்கிய மாகாண கள் மந்திரியான ஸ்ரீ வஸ்தவா என்பார் தமது சட்ட சபையில் கல கலப்பாக ஒரு பேச்சுப் பேசினர்.

"கள்ளுக் குடியை அடியோடு ஒழித்து விட வேண்டு மென்பது சர்க்காருடைய கொள்கையன்று. ஊரில் குடிப்பது குறைய வேண்டுமானாலும் சர்க்காருக்கு கள் வருமானம் நிறைய இருக்க வேண்டும். அதுவே சர்க்கார் கொள்கை. அதை யொட்டித் தான் எல்லா மாகாண மந்திரிகளும் நடக்கின்றோம்" என்று கூறினர்.

'பூரண மது விலக்கு' இயக்கத்தை சர்க்கார் ஆதரிக்கவில்லை என்பது இந்த மந்திரியின் உரைகளினின்று தெரிகிறது. ஆகவேதான் கள்ளுக்கடை மறியலைத் தடுக்க இவ்வளவு தடித்த சட்டங்களை சர்க்கார் செய்திருக்கிறார்கள் போலும்! குடிப்பதும் குறைந்து, வருமானமும் நிறைந்திருக்க வேண்டுமென மந்திரி கூறும் கொள்கை சுத்த 'ஹம்பக்'! வருமானம் அதிகம் வேண்டுமென்றால் குடியும் அதிகமாகியே தீரவேண்டுமன்றோ!

பூரண மதுவிலக்கு நாடாக இந்த நாட்டை ஆக்க வேண்டுமென்பது தேச பக்தர்களின் அவா! தேசபக்தர்களின் மனத்திற்கு மாறாக நடந்துகொள்ளும் கள் மந்திரிகளை தேசம் கண்டிக்காது வேறென்ன செய்யும்?

துக்கடாக் குறிப்புகள்

இக்பால் இட்ட நலுங்கு

ஓதிய மரத்தால் செய்த வட்ட மேஜை உடைந்து போனதென்பது அனைவருமறிந்ததே! ஆனால் 'இக்பால்' என்ற ஜாதிப் பித்தன் இப்போது தான் கப்பலி லிருந்து இறங்கினான். இறங்கியதும் பிரமாதமாக வட்ட மேஜையைப் பற்றிப் புகழ்ந்து பேசி யிருக்கிறான். பிரிட்டிஷ் ராஜ்யவாதிகள் ரொம்ப நேர்மையாக நடந்து கொண்டதாகவும், அநேகமாக எல்லாம் ஏற்பாடாகி விட்டதாகவும், பரஸ்பரமான பரிமாறல் இருந்ததென்றும், லார்ட் வில்லிங்டன் இருக்கும் வரை இந்தியாவுக்குக் குறைவில்லை என்றும் இந்தக் கவிசுவரன் கதறி யிருக்கிறான். இக்பாலும் ஸாமுயேல் ஹோரும் வட்ட மேஜையில் பெண்ணும் மாப்பிள்ளையுமாக உட்கார்ந்து நலுங்கு இடுவது போலப் படம் போட்டுப் பார்க்க வேண்டுமென்பது நமது ஆசை. இக்பால் அங்கு நலுங்கிட்டாரா? அல்லது நலங் கெட்டாரா?

ஆபாஸமான படமா?

பிரிட்டிஷ் தொழிற் கண்காட்சி யொன்று சீமையில் நடக்கப்போகிறது. அந்தக் காட்சியை விளம்பரம் செய்வதற்காக பெரிய பெரிய 'சுவரொட்டிகள்' தயாரா யிருக்கின்றனவாம். பிரிட்டானியா தேவி நின்றுகொண்டு "வாருங்கள் சந்தைக்கு" என்று கூப்பிடுவது போலப் படங்கள் போடப் பட்டிருக்கின்றனவாம். அந்த விளம்பரப் படங்கள், துருக்கி, எகிப்து, ஸிரியா, (ஏன் இந்தியாவையும் சேர்த்து) முதலிய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட லாகாதென தீர்மானித்திருக்கிறார்கள். "இந்தப் படங்கள் கிழக்கு நாட்டினர் கண்களுக்கு ஆபாச அர்த்தம் கொடுக்குமாதலால் தடுத்து விட்டோம்" என்று காரணம் கூறி யிருக்கிறார்கள். இந்தியர்கள் போன்ற கிழக்கு நாட்டினர் கண்களுக்கு மட்டும் ஆபாசமாகத் தோன்றக் கூடிய ஓர் படம் இங்கிலாந்து நாகரிக மக்களுக்கு அழகாக இருக்கிறது போலும்! மேனாட்டிலின்று வரும் சினிமாப்படங்களிலும், அதை விளம்பரம் செய்யும் சில சுவரொட்டிப் படங்களிலும் உள்ள ஆபாசம் சொல்லி முடியாது. அந்தச் சனியன்களை மட்டும் தடுக்காமல், பிரிட்டிஷ் வர்த்தக சம்பந்தமான ஓர் படத்தை மட்டும் ஒளித்து வைத்துக் கொள்ளும் பிரிட்டிஷ் மூளையே மூளை!

பப்பிளி ராஜா தர்பார்

'பாகல்காட்' என்ற இடத்தில் சுதேசிக் கண் காட்சி சாலை யொன்று நடை பெற்றது. சுதேசிப் பிரசாரத்துக்கென பாகல் காட் முனிஸிபாலிட்டி 400 ரூ. கொடுத்தது. அதை பம்பாய் துரைத்தனம் தடுக்கவில்லை. ஆனால் சென்னை மாகாணத்தில் பப்பிளி ராஜா தர்பாரின் கீழ் முனிஸிபாலிட்டிகள் எல்லாம், மாமியார் அட்டகாசத்தின் கீழ் அகப்பட்ட நாட்டுப் பெண்கள் போலத் தவிக்கின்றன. திருச்சி கண் காட்சிக்கென திருச்சி முனிஸிபாலிட்டி கொஞ்சம் பண உதவி புரிந்த போது சுக்ராச்சாரி மாதிரி சென்னைச் சர்க்கார் குறுக்கே விழுந்து தடுத்து விட்டார்கள். சுதேசி பிரசாரத்துக்கு முனிஸிபாலிட்டிகளும், ஜில்லா போர்டுகளும் பணம் தரலாகாதென கட்டளையிடும் மாகாண மந்திரிகளுக்கு இம்மி யளவு தேச பக்தியாவது உண்டா என்று சந்தேகம்.

பவானி தேக்கத்தின் பயன்!

பவானி தேக்கத்தின் பயனை அநுபவிக்கும் மிராசுதாரர்கள் எவ்வளவு தீர்வை தர வேண்டுமென்பதை நிர்ணயிக்க சென்னைச் சட்ட சபை ஓர் தனிக் கமிட்டியை நியமித்தது. அக் கமிட்டியார் ஆராய்ச்சி செய்து 9 ரூபாய் வீதம் தீர்வை விதிக்கலாமென முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த 9 ரூ விகிதம் மிகக் குறைவு என்று சென்னை அரசாங்கம் கருதுகின்றதாம். வரி, தீர்வை சம்பந்தமாக சட்ட சபைகள் என்ன தீர்மானம் செய்தாலும் அதை எதிர்க்க வேண்டுமென்பது சென்னைச் சர்க்காரின் கொள்கையா? அடுத்த சட்ட சபைக் கூட்டத்தில் இதைப் பற்றி விவாதம் வரும் போது அங்கத்தினர்கள் என்ன செய்யப் போகிறார்களென்று பார்ப்போம்.

நிறத் திமிரின் அட்டகாசம்!

தென்னாப்பிரிக்காவில் 'கெனியா' என்ற பிரதேசத்தில் இந்திய மக்களை நசுக்க வெள்ளையர் செய்த உபாயத்தை 'பிஜித் தீவின்' அதிகாரிகள் 'இமிடேஷன்' செய்து விட்டதாகச் செய்தி கிடைத்துளது. அங்கு 'வோட்டர் ஜாப்தா'வில் ஐரோப்பியர்களுக்குச் சரிசமானமாக இந்தியப் பெயர்களையும் சேர்க்க முடியாதென 'பிஜி' அரசாங்கம் அறிவித்திருக்கிறது. கறுப்பு நிறத்து இந்தியன் பாடுபட்டு உழைத்தால் அந்தக் காசு கறுப்பா யிருப்பதில்லை. ஆனால் இந்தியனுடைய 'வோட்டு' மட்டும் கறுப்பாக இருக்கிறது. என்னே நிறத் திமிர்!

முதல் வகுப்பு ஊழல்கள்

திண்ணைப் பள்ளிக்கூடங்களைப் போல ரயில் வண்டியிலும் நான்கு வகுப்புகளுண்டு. இண்டர் வகுப்பிலும், மூன்றாவது வகுப்பிலும் ஜனங்கள் ஏராளமாக ஏறுகின்றனர்; அந்த வண்டி ஓடுகிறது; ஆனால் அனாவசியமாக யாதொரு ஆளுமின்றி முதல் வகுப்பு வண்டிகளும், இரண்டாம் வகுப்பு வண்டிகளும் என் ஸதா ஓடிக் கொண்டிருக்கின்றன என்பது விளங்கவில்லை. முதல், இரண்டு வகுப்புகளை 'தீண்டத் தகாதவை' யென்று சாதாரண மக்கள் விலக்கி வைத்திருக்கின்றனர். சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் பெரும்பாலோர் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகட்கு 'பிரயாணப் படிச் செலவு' வாங்கிக் கொண்டாலும் மூன்றாவது வகுப்பிலேயே பிரயாணம் செய்கிறார்களென்று கேள்விப் பட்டிருக்கிறோம். அவர்கள் காசு மிச்சம் பிடிப்பது மட்டுமின்றி, அனாதையாகத் தனியாக முதல் வகுப்பில் உட்கார்ந்து செல்ல மனமில்லாதவர்களென்பதும் தெரிகிறது. அமெரிக்காவில் அநேக ரயில்வேக்களில் இந்த 'வகுப்பு பேதங்கள்' கிடையாதாம். ஆனால் இந்தியாவிலோ மனித வர்க்கத்தில் எத்தனையோ வகுப்பு பேதங்களிருப்பது போல ரயில் வண்டியிலும் வகுப்பு பேதங்களிருக்கின்றன.

'குதிரை ஓடா விட்டாலும் கொள்ளுத் தின்பதில் குறைவில்லை' என்று ஒரு பழமொழி உண்டு. அதைப்போல முதல், இரண்டு வகுப்புகளால் ரயில்வேக்கு வருமானம் குறைவாயிருப்பினும், அந்த வகுப்பு வண்டிகளின் மினுமினுப்பும், தளதளப்பும், மெத்தையிலுள்ள மூட்டுப் பூச்சியுள்பட கெடாதபடி காப்பாற்றுவதற்கு ஆகும் செலவோ அபாரமாயிருக்கிறது.

ரயில்வே நிர்வாகத்தினின்று ஒரு குறிப்பான கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது,

ஒரு 3-வது வகுப்பு ஆஸனத்தைக் காப்பாற்ற செலவிடும் பணம்	260 ரூ
சராசரியாக ஒவ்வொரு 3வது வகுப்பு ஆசனத்தினின்றும் வருமானம்	240 ரூ
ஒரு முதல் வகுப்பு 'ஸீட்'டை மேனி கெடாது காப்பாற்ற ஆகும் செலவு	4000 ரூ
ஆனால் சராசரியில் அது சம்பாதிப்பதோ	208 ரூ தான்

இந்த வெட்கக் கேடான விஷயத்தை திரு. ஜோஷி டெல்லி சட்ட சபையில் எடுத்துக் காட்டினார்.

ரயில்வே வருமானத்துக்கு மூல காரணஸ்தரான மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுக்கு அதிக சவுகர்யம் செய்யலாகாதா என்றால் மூக்கால் அழுகின்றார்கள். ஆனால் முதல் வகுப்பு வண்டிகளையும், முதல் வகுப்பு 'வெயிட்டிங் ரூம்'களையும், 'டைனிங் ஸலூன்'களையும் பராமரிப்பதில் ரயில்வேக்காரர் பணத்தை வாரியிறைக்கின்றனர். பசி யேப்பக்காரனுக்கு மண்ணு; புளிச்சேப்பக் காரனுக்கு ஹல்வாவா?
'கதிர்பெறு செந்நெல் வாட
கார்க்குலம் (மேகக் கூட்டம்) கண்டு சென்று,
கொதி திரை கடலிற் பெய்யும்' கொள்கையாக ரயில்வேப் பணம் அனாவசியமாக வாரி யிறைக்கப் படுவானேன்?

சட்டம் நீண்டது!

மோட்டார் சட்டம் கொஞ்சம் நீட்டப்பட்டு தபால் இலாகா சட்டத்தினின்று ஒரு பகுதியை இரவல் வாங்கிக் கொண்டிருக்கிறது. சர்க்காரின் தபால் இலாகாவுக்கு இடையூறாக வேறு எவரும் தபால் சேகரிக்கலாகாது, விநியோகம் செய்யலாகாது என்பது ஒரு சட்டம். கார்டு முக்காலணாவாகவும், கவர் ஒன்றே காலணாவாகவும் ஆகியுள்ள இந்தப் பஞ்ச காலத்தில் ஆங்காங்குள்ள சில தபால்களை பஸ்ஸுக்காரர்கள் கொண்டு போவதாக சர்க்காருக்கு ஜோஸ்யம் தெரிந்து விட்டதாம். ஆகவே மோட்டார் சட்டத்திலும் தபால் இலாக்கா அமுலைச் சேர்த்து ஓர் உத்தரவு இட்டிருக்கின்றனர். ஆனால் தபால் இலாகா சட்டத்தில் நண்பர்கள் ஒருவர்க்கொருவர் அனுப்பும் கடிதங்களையும், கூலி யேதும் வாங்கிக் கொள்ளாது கொண்டு செல்லும் கடிதங்களையும், தடுக்கவில்லை யென்பதை சர்க்கார் அதிகாரிகளுக்கு நினைப்பூட்டுகின்றோம்.

பற்றின்றி உழைத்தல்

சென்னை புரசைவாக்கத்தில் பூரி சங்கராச்சாரியார் செய்த ஓர் பிரசங்கத்தில் காந்தியடிகளைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்: "இந்தியாவின் ராஜீய விஷயங்களிலும், சமூக விஷயங்களிலும், மத சம்பந்தமான விஷயங்களிலும் 'காந்தி' என்ற பெயர் சிறப்பாக இருப்பதற்குக் காரணமென்ன? ஏனெனில் காந்திஜி தன்னலம் விடுத்த ஓர் பரம தியாகி! அந்தக் குணம் தான் இந்தியனுக்கு உகந்த குணம். காந்திஜியின் வாழ்க்கையிலேயே இதுதான் பரம ரகஸ்யம்."

நமது கிளிஞ்சல் குவியல்

சென்னையில் ரயில் வண்டியை நிறுத்தித் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக நால்வருக்கு தலா இரண்டு மாதம் சிறையும் 50 ரூ. அபராதமும்.

மதுரையில் ராஜத் துவேஷமான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததற்காக கே. ரங்காச்சாரி என்பவருக்கு ஒரு மாதம் கடுங்காவல்.

சேலத்தில் காந்தி தபால் கார்டுகள் கவர்கள் விற்றதற்காகக் கைது செய்யப்பட்ட சித்தப்பன் என்பவருக்கு 6 மாதம் தண்டனை.

தூத்துக்குடியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த சுப்பய்யா பிள்ளைக்கு 6 மாதம்.

கள்ளிக்கோட்டையில் பஹிஷ்கார தினத்தன்று மறியல் செய்ததற்காக 18 பேர் கைதியாயினர்.

கஸர்கோட்டுக்குச் சமீபத்தில் உள்ள காத்கா என்னுமிடத்தில் வன இலாகா சட்டத்தை மீறுவதற்காகத் தொண்டர்களை அழைத்துச் சென்றதற்காக ராமன் நாயர் என்பவருக்கு 4 மாதம் கடுங்காவல்.

போலீஸ் கமிஷனருடைய உத்தரவை மீறியதற்காக பம்பாயில் ஒரு காங்கிரஸ்காரருக்கு 15 மாதம் தண்டனை.

அலஹாபாத்தில் 'குடியானவர்கள் ஊர்வலம்' நடத்தியதற்காகவும் பேசியதற்காகவும் கோபிநாத் சிங்குக்கு 6 மாதமும் 50 ரூபாயும்.

பெஷவாரில் செஞ்சட்டையாளரின் தலைவரான ஷாம்ஷத்கான் என்பவர் சட்ட விரோதமான கூட்டத்தை நடத்தியதற்காக மூன்று வருஷமும், 500 ரூ. அபராதமும். அவரோடு கைதியான 43 பேர்களுக்கும் பல திறப்பட்ட தண்டனைகள் விதிக்கப்பட்டன.

சிவராத்திரி யன்று பூனவுக் கருகிலுள்ள ரத்னகிரியில் இரண்டு கோவில்கள் ஹரி ஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டன.

பம்பாயில் சிவராத்திரி யன்று ஏராளமான ஹரி ஜனங்கள் ஜாதி ஹிந்துக்களுடன் கலந்து சௌபாத்தி கடற்கரையில் ஸ்நானம் செய்து பஜனை செய்தார்களாம்.

சுபாஷ் சந்திரபோஸ் தேக நிலையை உத்தேசித்து வெளி நாட்டுக்குச் செல்ல சென்ற வியாழனன்று கப்பலேறி விட்டார்.

அமெரிக்கா குடியரசுத் தலைவர் ரூஸ் வெல்டைச் சுட முயன்றவனுக்கு 80 வருட காவல் தண்டனை தரப்பட்டது. சமீபத்தில் அந்தத் தலைவருக்கு வந்த பார்ஸலுக்குள்ளே ஒரு வெடி குண்டு வைக்கப் பட்டிருந்ததாம்.

சென்ற வருஷம் எப்பிரல் மாதத்தில் அமராவதி சிறையில் சட்ட மறுப்புக் கைதிகள் துன்புறுத்தப் பட்டதாக சொல்லப்பட்ட புகாரை விசாரிக்கச் சென்றவர்களில் மூன்று பேர்கள் விசாரித்து கீழ்க்கண்ட ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர் "கைதிகள் கலகம் செய்யும்படியான நிலைமையி லிருந்தனர் என்று சொல்வது ஆதாரமற்றதென்றும், அவர்களை வார்டர்கள் அடித்தனரென்றும், சாதாரணக் கைதிகளைப் போல் அவர்களை நடத்தக் கூடாதென்றும் நாங்கள் சிபார்சு செய்கிறோம்"

ஜேஹோலிலுள்ள ஜப்பான் படை நான்சிங் என்னு மிடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டது; மேலும் பாய்பியாவின் பேரிலும் படையெடுத்துச் செல்லுகின்றதாம். இரு கக்ஷிகளிலும் பலர் மரணமடைந்தனர்.

"தற்சமயமுள்ள அரசியலமைப்புப்படி நாங்கள் இந்திய ஏகாதிபத்தியத்தைச் சார்ந்த தனி மாகாணமென உணர்கிறோம் என்றும் இந்தியப் பிரதிநிதிகளுடன் கூட்டுப் பார்லிமெண்டரி கமிட்டியிலும், இந்திய ஐக்ய அரசியல் முறையிலும் சேர்ந்துகொள்ள சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்றும்" பர்மாவிலிருந்து பத்தொன்பது அங்கத்தினர்கள் சேர்ந்து வைஸ்ராய்க்கும், இந்தியா மந்திரிக்கும் தந்தியனுப்பி யிருக்கின்றனர்.

ஹரிஜன ஆலயப்பிரவேச மசோதாவை சட்டமாக்குவதில் பலவந்தப் படுத்துவதான வாசகங்கள் இருக்கின்றனவா என்று சப்ரூவை மகாத்மா பார்க்கச் சொன்னதில் 'பலவந்தம் எதுவும் அதில் இல்லை' யென்று சொன்னார்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.